பின்னர் தலைமையாசிரியர்களின் ஊதிய வீதம் உயர்த்தப்பட்டு உள்ளதால் பணி மூப்பில் மூத்தவர்கள் மட்டுமே தகுதி அடிப்படையில் பதவி உயர்வு மூலம் தலைமையாசிரியர்களாக நியமனம் பெற்று ரூ. 450–25–750 வீதத்தில் ஊதியம் பெறலாம். அவ்வாறில்லாது பணி மூப்பில் இளைய வர்களாயிருப்பவர்கள் சிலரும் தவறுதலாக தங்களது ஊதியத்தினை ரூ. 450–25–750 வீதத்தில் பெற்று வந்தனர். இதன் காரணமாக அவர்கள் பெற்ற அதிகப்படியான ஊதியத் தொகையினை திரும்பப் பெறவேண்டு மென ஆணையிடப்பட்டது.

திரு. கே.எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இப்படி பதவி பெற்ற ஒரு தலைமை ஆசிரியர் திரும்பிப் பெறுவது முறையாகாது என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அந்த உயர்நீதி மன்றம் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திற்கு ரூ. 450–25–750 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மற்றவர்களிடமிருந்தும் பணம் வசூலிக்கப் படாமல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே ஒருவர் ரிட் போட்டார். அதன் காரணமாக அவர் தலைமை ஆசிரியராக எவ்வளவு நாள் பணியாற்றினாரோ, அதுவரையிலே ரூ. 450–25–750 என்று சம்பளம் இருக்க வேண்டும் என்றும், அதற்குப் பிறகு கீழே இறக்கப்பட்டால், அதிலிருந்து பழைய ஊதியம் தரப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பினை நிறை வேற்றுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே.எஸ். கணபதி : தலைவர் அவர்களே, நான் சொல்வதும் அதுதான். வழக்கிற்குச் சென்றவருக்கு அவர் தலைமை ஆசிரியராக பணி யாற்றிய காலத்தில் ரூ. 450–25–750 என்ற ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று உத்தரவிடப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தலைமை ஆசிரியர் களாகப் பணியாற்றிய எல்லோருக்கும் அந்தப் பணிக்காலத்திற்கு வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுதான் ஆய்விலே இருக்கிறது என்று சொன்னேன். அந்தத் தீர்ப்பை மட்டும் நிறைவேற்றுவது என்றால், ஒரு ஆசிரியருக்கு மட்டும்தான் நிறைவேற்ற முடியும். அதையொட்டியுள்ள எல்லோருக்கும் நிறை வேற்றுவது என்றால், ஆய்ந்துதான் நிறைவேற்ற வேண்டிவரும்.

Representation of the Council of the College Tamil Teachers of Tamil Nadu

* 183. *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to L.C. Question No. 66 (Starred) on the floor of

the House on 21st August 1974, the steps taken on the representation received by the Government from the Council of the College Tamil Teachers of Tamil Nadu during December, 1973?

தமிழகத் தமிழ்க் கல்லூரி ஆசிரியர் மன்றத்தினரின் கோரிக்கை

திரு. செ. முத்துசாமி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற மேலவையில் 21-8-74 ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண் 66-க்கு அளித்த விடையினை யொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

தமிழகத் தமிழ்க் கல்லூரி ஆசிரியர் மன்றத்தினரிடமிருந்து 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அரசுக்கு வந்த கோரிக்கை மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கோரிக்கை வந்தது. தமிழ்க் கல்லூரி ஆசிரியர் ஊதிய விகிதங்களை ஒரளவுக்கு மாற்றி அமைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய சிபாரிசின் அடிப்படையிலே ஆங்கிலம் போதனை மொழியாக இருக்கக்கூடிய கல்லூரிகளிலே—ஆர்ட்ஸ் காலேஜ்களிலே—இந்தப் புதிய சம்பள விகிதம் அமுல்படுத்தப்படுகிறது. ஆனால் தமிழ்க் கல்லூரிகளிலே அவை அமுல்படுத்தப்படுவதில்லை. ஒவ்வொரு முறையும் பல்கலைக் கழக மானியக் குழு கல்லூரிகளிலே உள்ளவர்களுக்கு சம்பள விகிதத்தை மாற்றி உயர்த்தும்போது, தமிழ்க் கல்லூரிகளிலே இருக்கக் கூடியவர் களுக்கும் உயர்த்தப்படுமா? ஏனென்றால் தமிழை ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் மொழி உயர்வுக்காகப் பாடுபட்டுக் கொண்டுவரும் இந்த அரசுக் காலத்திலேயே, தமிழ்க் கல்லூரிகளிலே உள்ளவர்களுக்கு, ஆங்கிலக் கல்லூரிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு இருப்பதைப் போல சம்பளம் உயர்த்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மான்யக் குழுவினுடைய ஆதிக்கத்தின் கீழ் இத்தகைய கல்லூரிகள் வருவதில்லை. இதைத் தமிழக அரசே நேரடியாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகையினாலே ஏற்கனவே இருந்த விகிதத்தை ஓரளவிற்கு மாற்றியமைத்திருக்கிறார்கள். கலைக் கல்லூரிகளிலேயெல்லாம் எந்தத் தகுதியின் அடிப்படையிலே ஊதியம் வழங்கப்படுகிறதோ, அதே தகுதியுடையவர்கள் இங்கே வேலை பார்த்தால், அந்த ஊதியம் வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு அதனால் 22-10-74 அன்று ஓரளவு ஊதியம் உயர்த்தப் பட்டது. ஆனால் அந்த ஊதியத்தோடு இந்த ஊதியத்தை இணைக்க முடியாது. பல்கலைக் கழகம் இதற்கு அந்த ஊதியத்தைத் தரமாட்டார்கள்.

[1975 மார்ச் 25

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, திருவையாற்றில் உள்ள மொழிக் கல்லூரித் தலைவர் அவர்களுக்கு ரூ. 200–10–300 என்ற ஊதியம்தான் வழங்கப்படுகிறது என்று அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திருவையாறு கல்லூரி முதல்வர் அவர்கள் ஒரு விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அதிலே ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாகவும், அது நிவர்த்திக்கப்பட்டால், தங்களுக்கும் சரியான ஊதியம் கிடைக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதைத் துறையினரிடத்திலே அனுப்பி, ஆராய்ந்து விளக்கம் பெற்று முடிவு செய்ய இருக்கிறோம்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு பி. டி. ஆசிரியர் சம்பளம் கூட இல்லை என்ற முறையீடு இருக்கிறது. கொடுக்கப்பட்ட சம்பளங்களையும் பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கொடுத்து ஓராண்டிற்கு மேலாகிறது என்ற காரணத்தால், விரைவாக அதுபற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அது ஆராயப்பட வேண்டும். அது ஆராயப்பட்டு வருகிறது. சம்பளத்தைப் பிடித்திருக்கிறார்களென்றால், எங்கே பிடித்திருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தமிழ்க் கல்லூரிகளை பல்கலைக்கழகத்திலே கொண்டுவர ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? ஓரியண்டல் டைட்டில்களை பட்டப்படிப்பு ஆக்கக்கூடிய முறையிலே ஏதாவது அரசுக் கொள்கையிலே இருக்கிறதா, அந்த முறை செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பட்டப்படிப்புக்கு வேறு வகையிலே இப்போது 'பி. லிட்.' என்ற பட்டம் தரலாம் என்கிற அளவுக்குச் சென்னை பல்கலைக் கழகம் அண்மையிலே முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவின்படி, பி. லிட்., பட்டம் பெற வித்வான் படித்தவர்களுக்கு வாய்ப்பு தந்திருக்கிறார்கள். இதிலேயே பட்டப்படிப்பைக் கொண்டுவர செயற்குறிப்பு இல்லை.

திரு ம. பொ. சிவஞானம்: தலைவர் அவர்களே, பி. லிட்., என்ற பட்டயத்தைப் பட்டமாக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகேனும், கலைக் கல்லூரியின் தகுதி தமிழ்க் கல்லூரிக்கு கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளில் என்னென்ன நிலைமை வைத்திருக்கிறோமோ, அந்த தனிப்பட்ட நிலைமைகள் இருந்தால், அதே தன்மைக்கு வரலாம். இதற்கிருக்கிற தன்மைகள் எல்லாம் தனியாக இருக்கிற காரணத்தால், அவற்றை

1975 மார்ச் 25]

ஆராய்ந்து பல்கலைக் கழகம் ஒப்புக்கொள்ளுமேயானால், கலைக் கல்லூரிகள் தன்மைக்கு வைக்கலாம். அது வேறு, இது வேறாக இருப்பதால்தான், தனித்தனியாக வைத்து நடத்தவேண்டியிருக்கிறது.

திரு செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, தமிழ் பட்டப்படிப்புக்கு பி. லிட்., என்ற ஆங்கிலப் பெயர் வைக்கத்தான் ஒப்புக்கொண்டிருக்கிறதா? தமிழிலேயே பட்டப் பெயர் கொடுப்பதற்கு ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் ஓரிரு பரீட்சைகள் எழுதினால், யார் யார் தேறுகிறார்களோ அவர்கள் பி. லிட்., பட்டத்திற்கு உரியவர்கள் ஆக்கப்படலாம். பத்தாம் வகுப்பு படித்து வித்துவான் படித்தவர்களுக்கெல்லாம் பி. லிட்., கொடுத்துவிடமாட்டார்கள். அதனுடைய முழு விவரக் குறிப்பும் பல்கலைக் கழகத்திலிருந்து கிடைக்கவில்லை. நீண்ட நாட்களாக ஆராய்ந்து அண்மையிலேதான் முடிவெடுத்திருக்கிறார்கள். முழு விவரக் குறிப்பும் வந்த பிறகு, ஓரிரு தேர்வு எழுதவேண்டியிருக்கும். தேர்வு எழுதி தகுதி பெற்றால் பி. லிட். பட்டம் கிடைக்கும்.

திரு செ. முத்துசாமி ; தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழர்கள் தான் அத்தனை பேரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நடுவண் அரசு ஆங்கிலத்திலே தான் பட்டம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறதா ? அப்படி ஏதாவது குறிப்புகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதைப் பல்கலைக் கழகம் தான் முடிவு செய்ய வேண்டும். நடுவண் அரசுத்தன்மைகள் ஒன்றும் இல்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் பல தடவை விவாதித்து இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு பட்டமாக்கப்படுவதன் மூலம் அவர்களெல்லாம் எதிர்காலத்திலே ஆசிரியர்களாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்திலேதான் இந்தப் பட்டம் ஏற்படும் என்ற நிலைமை வந்து, ஓரளவுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புதல் அளித்திருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகமும் அதைக் கடைப்பிடிக்குமானால், தமிழாசிரியர்களின் பெருங்குறை நீங்கும். இதை அந்தப் பல்கலைக் கழகத்திலே இருப்பவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவை எடுப்பார்கள்.

Post of the Director of State Institute of Education

* 184. *Q.*—Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state —

(*a*) whether the post of the Director of State Institute of Education in the Directorate of School Education has not been filled up for months; and

(*b*) if so, the reason therefor?